முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# எதிர்காலம் குறித்த
# இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த
# மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்

**(விளம்பி தை மாதம் 27ம் திகதி முதல் மாசி மாதம் 5ம் திகதி வரை**
**பிப்ரவரி 10ம் திகதி முதல் பிப்ரவரி 17ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. இயற்கை பலமிக்க பாரதமே
   இறைபலமிக்க ஞான தமிழகமே
   தயவு கொண்டு மக்களை காக்கும்
   தருமநெறி கொண்ட தமிழகமே
2. தமிழகம் இந்தியா தன்னில்
   தக்க விளம்பி கலை திங்கள் இருபானேழ் திகதிமேல்
   நேமமுடன் சால் திங்கள் பஞ்சதிகதி வரை
   (விளம்பி வருடம் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019, ஞாயிறு முடிய)
   நடக்கும் வார நிகழ்வாக எதிர்கால பலனை
3. பலனை வார ஆசியாகவே
   பகருவேன் சுப்பிரமணியர் யானும்
   வளமான இயற்கை பாதுகாப்பும்
   வரிச்சுமை நீக்கிய ஆளுமையும்
4. ஆளுமையும் கொண்ட அரசாங்கமே
   ஆளுமை வழி சிறப்பும் தனித்துவமும்
   வலுவான மக்கள் பலமும் அடைய நேரும்
   வகையிலா மாயவலை கொண்ட
5. கொண்ட பகட்டும் பசப்புமான நிலை
   கொள்கை திடமின்றி விழ நேரும்
   தொண்டென சேவையில் நேர்மை
   தியாகமிக்க தலைமைக்கு வந்தால்தான்
6. வந்தால் தான் தமிழகம் பரதமும்
   வளரும் மலரும் உலக நாடுகளுள்
   சந்தை போல இனபேதம் வழி
   சகிப்புத் தன்மை கொள்ளா தலைமை
7. தலைமை தொடர்ந்தால் புவிதனில்
   தன்னார்வ உண்மை நிலை மாறி
   பிழைபடும் வளர்ச்சி நிலை கெடும்
   பொருளாதார வளம் பெருகும் வண்ணம்

8. வண்ணமுடன் குறுஞ் சிறுதொழில்
வளர்ச்சிக்கும் வழிவகை செய்து
எண்ணம் வழி மக்களிடை நம்பிக்கை
ஏற்றும் வண்ணம் சேவை ஆற்றி

9. ஆற்றியே கீழும் மேலுமான அரசுகள்
அதிகாரம் எனும் நிலை கடந்து
ஆற்றல்பட தயவான ஆளுமை காண
அவசியம் புண்ணிய பூமி தமிழகம்

10. தமிழகம் காக்கப்பட ஊக்கம் பெற
தாயகம் பரதமும் தன்நிலை உயரும்
நேமமுடன் ஞானவழி காட்டும்
ஞானதேசிகன் உண்மை நெறி வழி வர

11. வருகவே எல்லா வகையும்
வளரும் நல் ஞான ஆட்சியாக
ஆறுமுகன் என் தயவுபட மாறும்
அறிவித்த வார ஆசி முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

இயற்கையினால் சூழப்பட்டு இயற்கையே அரணாகவும் இயற்கை பலம்மிக்க பாரததேசத்திலும் இறைபலம் எனும் தெய்வீக சக்திகளின் பலத்தினை அதிகமாக உடையதும் தயவினால் பிற உயிர்கள் மீதும் கருணை கொண்டு மக்களைக் காக்கும் தருமத்தின் நெறியினை பின்பற்றி செல்கின்ற தமிழகத்திலும் விளம்பி வருடம் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 5ம் நாள் 17.02.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை எதிர்கால பலன்களாக சுப்பிரமணியர் யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

வளமான இயற்கை சூழலும் இயற்கையின் பாதுகாப்பும்மிக்க நாடாய் வரிச்சுமை நீங்கிய நல்ல அரசாய் உடைய அரசாங்கமே ஆட்சி புரிதலில் சிறப்புமிக்க அரசாகவும் தனித்துவம்மிக்க அரசாகவும் வலுவான மக்களின் பலத்தினை பெற்றிட்ட நல்ல அரசாகவும் அமைந்திடும். அதை விடுத்து மாயவலை போன்று மக்களை கவர்ச்சிகரமான திட்டங்கள் மூலம் கவர்ந்து பகட்டும் பசப்பும் கொண்ட நிலைப்பாடுடன் நடத்தப்படும் அரசானது கொள்கை உறுதி இல்லாத அரசாக மாறி நிலையற்ற ஆட்சியை உடைய நாடாக மாறி வீழ்ச்சி அடைய நேரிடும்.

ஆதலினால் நாட்டினை ஆட்சி செய்வோரும், அதிகாரத்தில் உள்ள அதிகாரிகளும் ஆட்சி பொறுப்பில் உள்ளோரும் அரசை வழிநடத்தும் செயலை கொண்டதாக செல்வதுடன் மக்களை ஆட்சி செய்வதில் நேர்மையும், தியாகமும் மிக்கவராய் உடைய தலைமையாகவும் விளங்கி தன்னலமற்றவராய் சேவை மனப்பான்மையும் பொதுநலமாய் செயல்பட்டு வந்தால்தான் தமிழகமும் பாரததேசமும் நன்கு வளரும் உலக அரங்கில் சிறந்த நாடாய் மலரும்.

எண்ணற்ற இனங்கள் நாட்டினில் இருந்தாலும், இனபேதம் கொள்ளாமல் சகிப்புதன்மை கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் இனபேதங்களை கருத்தில் கொண்டு சகிப்புத்தன்மை இல்லாமல் தலைமையில் உள்ளோர் இனபேதங்களுக்கு மதிப்பளித்து பேதாபேதங்களுடன் ஆட்சி செய்வார்களேயானால் இவ்வுலகினில் தன்னார்வம்மிக்க தொண்டு நிலையும், நாட்டுப்பற்றுடன் இயங்கும் உண்மை நிலைமையும் மாற்றம் அடைந்து நாடு கெட்டுவிடும் அபாயம் நேரும், நாட்டின் வளர்ச்சி நிலை பாதிப்படையும்.

நாட்டினை ஆட்சி செய்வோர் பொருளாதார வளம் பெருகிடும் வண்ணமாக குறுந்தொழில்களையும், சிறுதொழில்களையும் மதித்து நடந்து சிறுகுறு தொழில்களின் வளர்ச்சிக்கும் வழிவகைகள் செய்து மக்களிடையே அரசின் மீது நல்லெண்ணம் உண்டாகும்படி செய்து மக்களின் நம்பிக்கையைப் பெற்று மக்கள் ஏற்றுக் கொள்ளும்படியான சேவைகளை தொடர்ந்து செய்து வர வேண்டும். இவ்விதமே மக்கள் நலனில் அக்கறையோடு மக்கள் ஏற்றுக் கொள்ளும்விதமான செயல்பாடுகளை மத்திய மாநில அரசுகள் செய்து வர வேண்டும். அதிகாரம் எனும் நிலையைத் தாண்டி மக்கள் நலனே முதன்மையாகக் கொண்டு ஆற்றலுடன் தயவுமிக்க ஆட்சியை செய்திட வேண்டும்.

நாட்டினில் புண்ணியம்மிக்க புண்ணிய பூமியான தமிழகம் மத்திய அரசால் அவசியம் காக்கப்பட வேண்டும். மத்திய அரசு தமிழகத்தின் மீது அக்கறையோடு செயல்பட்டால் பாரததேசமே மிகுந்த வளர்ச்சியை அடைந்திடும் ஆட்சி செய்வோரும், அதிகாரிகளும், மக்களும் தயவே வடிவான யுகமாற்ற ஞானி, உலகிற்கு தர்மத்தின் வழியையும் ஞானத்தின் வழியையும் உபதேசித்து வழிநடத்தும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உண்மை ஆன்மீக நெறிகளை ஏற்று கடைப்பிடித்து ஜீவதயவுடன் நடந்து வர, நாடு எல்லா வகையிலும் வளர்ச்சி அடையும். ஜீவதயவுடன் அரங்கனின் உண்மை ஆன்மீக நெறியினை பின்பற்றி, தர்மநெறி கொண்டு ஆட்சி செய்திட அந்த அரசு நல்ஞான ஆட்சியாக மாறும், ஆறுமுகப் பெருமான் எமது தயவினால் நாட்டில் நல்லாட்சி ஞானஆட்சியாக மாறிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–